


THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக


கொலோசெயர் 3:16

ஜூன்
2005

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 5 கனி 7

# நாம் அவரை அணிந்து கொள்வது எவ்வாறு?



## How do we wear Him?

*-Betty Burton Choate*

ஒரு புறம், வேதவாக்கியங்கள் கிறிஸ்தவன் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருத்தலையும், ஞானஸ்நானத்தில் அவருடைய இரத்தினால் கழுவப்பட்டிருத்தலையும் மேலும் அவருடைய நீதியைத் தரித்தவர்களாக இருத்தலையும் வலியுறுத்திப் பேசுகிறது. அனுதினமும் நாம் வெளியில் செல்கையில், ஜனங்கள் நம்முடைய நடக்கையில் கிறிஸ்துவைப் பார்க்க வேண்டும், நம்மை அல்ல.

இன்னொரு புறம், வேதவாக்கியங்கள் கிறிஸ்து கிறிஸ்தவர்களில் வாசம் பண்ணுகிறதை: *"விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் ......"(எபே.3:17)* என்று பேசுகிறது. நாம் என்ன செய்தாலும், நாம் எங்குசென்றாலும் நம்மோடு கிறிஸ்துவை எடுத்துச் செல்கிறோம் என்பது இதன் அர்த்தமாகிறது - அதாவது அவர் நமக்குள் இருக்கிறார் (ரோம*8:9,10*).

✦ நாம் கோபம், அதிருப்தி, விரோதங்கள், கெட்ட வார்த்தைகள், நம்முடைய வாழ்விலிருக்கிற பிரச்சனைகளுக்கு உலகப் பிரகாரமான பிரதியுத்தரம் போன்றவற்றிற்கு கிறிஸ்துவைப் பொறுப்பாளியாக்குகிறோமா?

✦ நாம் மது அருந்துதல், புகையிலை போடுதல் மற்றும் வேறு தீமைவிளைவிக்கும் வஸ்துக்களாகிய நம்முடைய உலகப் பழக்கவழக்கங்கள் மூலம் நம்முடைய சரீரங்களை (நம்மில் வாசம்பண்ணுகிற கிறிஸ்துவோடும்) தவறாக பயன்படுத்துகிறோமா?

✦ நாம் கிறிஸ்து செல்ல விரும்பாத இடங்களுக்கு அவரை எடுத்துச் செல்கிறோமா?

நாம் நம்முடைய கர்த்தர் வாசம் பண்ணவிரும்பும் வீடாகவும், அன்பின் தேவனை நம்முடைய அங்கத்தினரோடு ஆராதிக்கவும், நற்கிரியை செய்து, இழந்து போனவர்களை இரட்சிக்கும்படிக்குப் போதிக்கின்றவர்களாகவும் நம்மை உருவாக்குகிறோமா?

அல்லது நாம் நம்முடைய நடக்கையினால் அவர் தொடர்ச்சியாக வேதனைப்படுவதும், தள்ளப்படுகிறதுமான இப்பேர்பட்ட உலக வாழ்வு வாழ்கிறோமா? அவர் நம்மோடு வாசம் செய்வாரா, அல்லது நம்மை விட்டுப் போகும்படி நாம் அவரைப் பலவந்தம் பண்ணுவோமா?

கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர்16:16)

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 5 ஜூன் - 2005 கனி - 7


ஆசிரியருரை

# முதல்வர்

## Pre-emi'nent



முதல்வர் என்ற வார்த்தை முதன்மையானவர்களுக்குத் தகும். இந்த வார்த்தை நாட்டின் தலைவர்களுக்கும், கல்விச்சாலை தலைவர்களுக்கும் பொருந்தும். ஆவிக்குரிய சபைக்கு இது பொருந்துமா? பொருந்தாது. ஏனென்றால் ஆவிக்குரிய சபைக்கு தேவன் தலைவர்களை ஏற்படுத்தவில்லை ஒரே ஒரு முதல்வரை ஏற்படுத்தியுள்ளார் அவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. "அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது, அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ1:17,18). இந்தப் பதவியை ஒருவர் நாடுவாரே என்றால் தேவன் ஏற்படுத்திய தலைவரை கீழே தள்ளிவிட்டு தான் அந்த இருக்கையில் உட்கார முயற்சிக்கிறார் என்றுதான் அர்த்தம். இது வேதாகமத்திற்கு விரோதமான செயலும், தேவ சித்தத்திற்கு முற்றிலும் புறம்பான எண்ணமும் கூட. இயேசுகிறிஸ்து எல்லாவற்றிற்கும் முந்தினவர். ஒரு மனிதன் எல்லாவற்றிற்கும் நான் முந்தினவன் என்று சொல்லிவிட முடியாது. வானமும் பூமியும் உண்டாக்கப்பட்ட பின்பே மனிதன் உண்டாக்கப்பட்டான். ஆகையால் அவனுக்கும் முந்தினவர் ஒருவர் இருக்கும் போது அவன் சபையில் தன்னைத்தான்

உயர்த்தலாகாது.

சபைகளிலே சில முதன்மை விரும்பிகளை நாம் பார்க்கிறோம். இந்த முதன்மை விரும்பிகள் எதற்காக முதன்மையை விரும்புகிறார்கள் என்று தெரியவில்லை. நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோ "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்"(பிலி.2:6-11) என்று வாசிக்கின்றோம். இங்கே இயேசுகிறிஸ்துவானவர் தன்னைத்தான் உயர்த்தவில்லை, அவர் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை, மாறாக சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் அவரை உயர்த்தி சபையாகிய சரீரத்துக்கு தலையாக தந்தருளினார்.

இன்றைக்கு இருக்கிற திருச்சபைகளில் கீழ்ப்படிதலை பார்ப்பதே அபூர்வமாக இருக்கிறது. நான்தான் பெரியவன், இல்லை இல்லை நான்தான் பெரியவன் என்று அடித்துக் கொண்டு முதன்மையை விரும்புகிறார்கள். வேதாகமத்திலேகூட சீஷர்கள் இவ்விதமான வாக்குவாதம் செய்ததை வாசிக்கின்றோம். "தங்களில் எவன் பெரியவனாயிருப்பானென்கிற வாக்குவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று. இயேசு அவர்கள் இருதயத்தின் யோசனையைஅறிந்து, ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதைத் தமதருகே நிறுத்தி, அவர்களை நோக்கி: இந்தச் சிறுபிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான்;

உங்களெல்லாருக்குள்ளும் எவன் சிறியவனாயிருக்கிறானோ அவனே பெரியவனாயிருப்பான்" (லூக்.9:46-48) என்றார். ஒரு மனிதனுக்குள் முதன்மையான எண்ணம் வரும்போது அவன் மற்றவர்களை அலட்சியம் பண்ணுவான் ஆகையினாலே கர்த்தர் இங்கு சீஷர்களுக்குப் புகட்டிய பாடம் என் நாமத்தினிமித்தம் இந்தச் சிறு பிள்ளையை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான் என்றார். சபைகளிலே இன்று அநேகர் முற்பிதாக்களின் காலத்தில் பாளைத்திற்குபுறம்பே ஒதுக்கப்பட்ட குஷ்டரோகிகளைப்போல ஒதுக்கப்படுகிறார்கள். இது சபையிலிருக்கக் கூடிய சில முதன்மை விரும்பிகளால் வரக்கூடியவை. இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடும்போது "நான் சபைக்கு எழுதினேன்; ஆனாலும் அவர்களில் முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை"(3யோவா.9) என்றான். இன்னும் இந்நிகழ்ச்சி தொடர்கிறது.

சபைகளில் பக்தியுள்ள அநேகர் தள்ளுண்டு போகிறார்கள். வழிநடத்துகிறவர்கள் முதன்மையானவர்களுக்கு அடிபணிந்து அவர்கள் சொற்படி கேட்டு வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும், கர்த்தருடைய பந்தியை பரிமாறவும், காணிக்கை எடுக்கவும் இன்னும் சபையின் அநேக வேலைகளில் அவர்களுக்குத் தருணம் கொடுக்காமல் தாங்களே எல்லாத் தகுதியுமுடைவர்கள் என்று அநேகரை ஒதுக்கிவிடுகிறார்கள். சிலர் இறுமாப்பாய் ஆளுகிறார்கள். நீ அதை செய் நீ இதைச் செய் என்று சொல்லி வேலை ஏவுகிறவர்களாக இருந்து கொண்டு நியாயசாஸ்திரிகளைப்போல தங்கள் விரல்களில் ஒன்றினாலும் அந்த வேலையைச் செய்ய மாட்டார்கள். கர்த்தர் சொல்லும்போது "உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன்........ அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற்.10:43-45) என்றார். ஊழியம் என்றாலே நாமே முன் வந்து செய்யவேண்டிய காரியம். அவன் செய்யட்டும் இவன் செய்யட்டும் என்று சொல்வதைவிட நாமே அதைச் செய்யவேண்டும். எனக்கு ஒரு

சபைபோதகரை ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு நாள் மாலை கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அக்கூட்டத்திற்கு வருகிற சிறுபிள்ளைகளில் சிலர் சாக்லேட் தின்றுவிட்டு அந்தப்பேப்பர்களை அந்த வளாகத்திலே போட்டுவிட்டதை அங்கிருந்த சபைபோதகர் பார்த்து அவைகளை பொறுக்கி தன்னுடைய பேன்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டதைப் பார்த்தேன். இக் காரியத்தை ஒருவர் சொல்லி அவர் செய்யவில்லை. அல்லது ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று அவர்களைப்பார்த்து திட்டவும் இல்லை. அந்த வளாகம் சுவிசேஷ கூட்டம் நடைபெறும் வளாகம் அது சுத்தமாக இருக்கவேண்டும் என்று நினைத்து முதலாவது தன்னை ஒரு பணிவிடைக்காரனாக (வேலைக்காரனாக) மாற்றிக்கொண்டார். இது முதன்மைக்கு ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு என நினைக்கிறேன்.

பவுல் குறிப்பிடும்போது "நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்"(1கொரி.9:19) என்கிறான். மிகவும் தலைசிறந்த அப்போஸ்தலன் என்று பவுலை சொல்லலாம். ஊழியத்திலே அவன் பட்ட பாடுகளுக்கு அளவே இல்லை. இத்தனை பாடுகளையும் கர்த்தருடைய சபைக்காக சகித்த அவன் நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன் என்கிறானே அவனுடைய ஒப்புக்கொடுத்தல் எத்தனை பெரியது! அதிக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டுமானால் முதலாவது நம்மை நாமே அர்ப்பணிக்க வேண்டியது மிக அவசியம். இன்றைய திருச்சபையின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது நம்மை நாமே எல்லாருக்கும் அடிமையாக ஒப்புக்கொடுக்காததே. நான் எப்படி அவனுக்குக் கீழாகவேலை செய்யமுடியும். அவன் நேற்று வந்தவன் நான் பத்து பதினைந்து வருடங்களாக சபையில் இருக்கிறேன் என்று வாக்குவாதம் செய்வீர்கள் என்றால் நீங்கள் தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றமுடியாது.

"நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே

அவயவங்களாயுமிருக்கிறீர்கள்"(1கொரி.12:27) என்ற வசனத்தை நீங்கள் அனுதினமும் நினைவுகூரவேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தில் நாமும் ஒரு அங்கம் என்பதை நாம் நினைவு கூருவோமானால் கிறிஸ்துவின் சரீரம் (சபை) செயல்பட ஒத்துழைப்போம். "அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" (கலா.1:4). அதைப்போல நாமும் தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றும்படியாக நம்மை நாமே ஒப்புக்கொடுப்போம். நாம் நம்மை ஒப்புக்கொடுப்பதால் கிறிஸ்துவுக்கு மேலானவர்கள் அல்ல "சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் ஏஜமானிலும் மேற்பட்டவனல்ல. சீஷன் தன் போதகனைப் போலவும், வேலைக்காரன் தன் ஏஜமானைப்போலவும் இருப்பது போதும்......" (மத்.10:24,25) என்ற வசனத்தின்படி மேற்பட்டவர்களல்ல. அவருடைய மாதிரியின்படி நடப்பதால் அவரைப்போல மாற்றப்படுகிறோம்.

"அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்" (எபி.5:5). தேவனால் சபைக்கு முதல்வராகவும், இரட்சகராகவும், பிரதான ஆசாரியராகவும் கிறிஸ்துவானவர் உயர்த்தப்பட்டிருக்கும்போது சபையானது அவருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு தேவனை அறிகிற அறிவில் வளர்ந்து பெருகவேண்டும். "தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக" (எபே.3:9,10) என வாசிக்கிறோம். ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியவேண்டும். ஏனென்றால் அவரே அதற்குத் தலையானவர் (எபே.5:23,24). "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக" (எபே.3:21) ஆமென்.

# சபையைப் பற்றி ஏன் மிக அதிகமாகச் சொல்லப்படுகிறது?

## Why Is so Much said About The Church?

***J.C.Choate***



சபையைப் பற்றிய விஷயங்கள் வளர்ந்து விடும் போது அதிகமான ஜனங்கள் மிகவும் எதிர்மறையான எண்ணமுடையவர்களாக மாறிவிடுகின்றபடியினால் சபையைக் குறித்து மிக அதிகமாகச் சொல்லப்பட்டு வருகிறது. ஜப்பானில் அநேகர் இயேசுவில் ஆர்வத்தினை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் சபையில் ஆர்வம் காட்டுகிறதில்லை. அமெரிக்காவின் குரலில் **(VOA)** 'கிறிஸ்தவ கன்மலை' பற்றி விவாதிக்கப்பட்ட ஒரு சமீபத்திய பாகம் இடம் பெற்று, இளைஞர்கள் கிறிஸ்துவைக் குறித்தே அறியவிரும்பு கின்றனர் ஆனால் சபையைக் குறித்த விஷயத்திற்கு வருகிறபோது அவர்கள் தடைசெய்யப் படுகின்றனர் என குறிப்புகளில் ஒன்று வெளியானது. இது ஏன்? கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையேயுள்ள உறவினை அவர்கள் காண்கிறதில்லையா? இது கிறிஸ்துவினால் கட்டப்பட்ட சபை, அதற்காக அவர் மரித்தார், அவர் அதனுடைய இரட்சகர், ஒரு நாள் பிதாவினிடத்தில் அதை ஒப்படைக்கும்படிக்கு அவர் திரும்பவருவார் என்ற உண்மையைப் பற்றிய உணர்வில்லாதவர்களாய் அவர்கள் இருக்கிறார்களா?

முதல் ஸ்தானத்தில், நாம் அறிந்துள்ளபடி மத உலகில், வேதாகமம் அடையாளங்காட்டுகிற இந்த சபையைப் பற்றிய எண்ணத்திலிருந்து அதிகமானோர் தூரமாய் விலகியுள்ளனர். அவர்கள் சபையென்பது ஒன்றுமில்லை என்பது போல ஆனால் பல்வேறு நாமங்களில், பல்வேறு கோட்பாடுகளில், பல்வேறு ஆராதனை மற்றும் அனுசரிப்புகளோடு, பிரிவினைகளின் ஒரு குழுவாகக் காண்கின்றனர். இது இந்த குழுக்களுக்கிடையே போட்டி, மற்றும் கோபம் போன்றவற்றிற்கு இட்டுச் செல்கிறது.

அதன்பின் போட்டியின் தோற்றத்தினை இது நலமானதாகக் காண்பிக்கிறது, பிரசங்கியார்கள் ஒருவன் எந்த சபையின் அங்கத்தினராய் இருந்தாலும் அவன் பரலோகம் செல்லமுடியும் என ஜனங்களிடம் எவ்விதத்திலும் சபை முக்கியமானதல்ல என்கிறார்கள். இந்தவிதமான செய்தி இடைவிடாமல் பிரசங்கிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறபடியினால் ஒரு வித்தியாசமான, சம்பந்தமில்லாத இந்த சபை விஷயத்தைப் பற்றி கேள்விப்படுவதில் பெரும்பாலானோர் சலிப்படைந்துள்ளனர் என்பதில் ஆச்சரியம் எதுவும் உண்டா?

ஆனால் சபையைக் குறித்து வேதம் என்ன கூறுகிறது? அங்கே இது ஒரு ஒவ்வாத விஷயமாக தோற்றமளிக்கிறதா? இதைப்பற்றி அங்கே சிறிதளவு தான் வாசிக்கிறோமா? வேதத்தில் சபையானது ஒரு தேவையற்ற பொருளாக அகற்றப்பட்டுள்ளதா?

கவனியுங்கள்! வேதாகமத்திற்கு மட்டும் நீங்கள் செல்லும் போது, நீங்கள் வேதாகமத்தின் முழுச் செய்தியின் ஒரு பிரதான சங்கதி நிஜமாகவே சபை தான் என்பதைக் கண்டு வியப்படைந்து போவீர்கள். பழைய ஏற்பாடு, சபையின் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்களால் நிரம்பியுள்ளது (ஏசா.2:2,3; யோவே.2:28,29; தானி.2:44). சபையும், அதனுடைய அங்கத்தினர்களின் குணாதிசயங்களும் கிறிஸ்துவினுடைய போதனைகளின் முழுச்சங்கதிகளாயிருந்தன (மத்.6:9-13, மத்.6:33, மத்.18:17). அவர் உலகத்தில் அதனுடைய வருகையைப் பற்றிய தீர்க்கதரிசனங் களை முன்மொழிந்தார் (மாற்.9:1; மத்.16:18,19). சபையினுடைய கிரியைகளை அறிந்துகொள்ள நமக்கு உதவியாக அவர் பரலோகராஜ்யமாகிய சபையைக் குறித்து பல உவமைகளைப் பேசினார் (மத்.12,13,25).

அப்போஸ்தல நடபடிகளுக்குத் தொடர்ந்து செல்லுகையில் நாம் எருசலேமில் சபையின் ஆரம்பத்தினைப் பெறுகிறோம் (அப்.2), சம்பாஷனைகளின் ஒட்டு மொத்தமும், பிரசங்கம், போதனை, மற்றும் சுவிசேஷப்பயணங்கள் என அதனுடைய உபத்திரவம் மற்றும் உலக முழுவதிலும் சபையின் விரிவாக்கம் போன்ற அனைத்தையும் நாம் பெற்று அனுபவிக்கிறோம். ரோமர் முதல் யூதா வரை முழுவதையும் வாசிக்கையில் சபையின் அஸ்திபாரம் சம்பந்தமான அனைத்து தகவல்களையும் (1கொரி.3:11), அது கிரயத்துக்குக் கொள்ளப்பட்டதையும் (அப்.20:28), அதனுடைய நாமத்தையும்

(ரோம.16:16), அதனுடைய இரட்சகரையும் (எபே.5:23), அதனுடைய தலைவரையும் (கொலோ1:18), அதனுடைய ஒருமையையும் (எபே.4:1-6), அதை பிதாவினிடத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படி கிறிஸ்து மறுபடியும் ஒரு நாள் வருவார் என்ற அதனுடைய எதிர்காலத்தைப் பற்றியும் (1கொரி.15:24) பல்வேறு தனிநபர்களுக்கும் சபைகளுக்கும் எழுதப்பட்டிருந்த எல்லா நிருபங்களையும் நாம் பெற்றிருக்கிறோம்.

அதன்பின் கடைசியாக சரீரமாகிய சபை மற்றும் அதனுடைய தனித்தனி அங்கத்தினர்களின் துன்பங்களையும், உபத்திரவங்களையும் மற்றும் அதனுடைய கடைசி வெற்றியினையும் பற்றி வெளிப்படுத்தினவிசேஷப் புத்தகம் சொல்லுகிறது. உண்மைப் பொருளாக, ராஜ்யத்தை அல்லது சபையைப் (ஜனங்களின் ஒரே சரீரத்திற்கு இரண்டு வார்த்தைகள் உண்டு) பற்றி சொல்லப்பட்டுள்ளவற்றை நீங்கள் வேதவாக்கியங்களிலிருந்து எடுத்துப்போட்டால், அதிகமாக நீங்கள் எடுபட்டு போயிருக்க மாட்டீர்கள்! மத உலகம் என அழைக்கப்பட்டவற்றில் கூட ஒரு முக்கியமற்ற இடத்தோடு சபையை ஒப்பிடுகையில் சபையைப் பற்றிய வேதாகமத் தோற்றம் அதிர்ச்சியடையப் பண்ணுகிறதில்லையா?

ஆனால் வேதம் ஏன் மிக அதிகமாக சபையைப்பற்றிச் சொல்கிறது? ஏனென்றால் இது பேசப்படவேண்டிய ஒரு புதிய விஷயம், ஒரு அதிமுக்கியமான விஷயம், உலகம் இதைப் பற்றி எதுவும் அறியவில்லை. கிறிஸ்து தம்மைப் பின்பற்றுகிற ஜனங்க்ளை ஒரே சரீரமாகக் கூட்டிச்சேர்க்கும்படிக்கு வந்தார், மேலும் அவர் அந்த குழுவை இரட்சிக்கும்படிக்கு மரிக்க விரும்பினார், எனவே அவர் தாம் செய்து வந்த எல்லாவற்றைப் பற்றியும் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளவிரும்பினார். மனிதன் புரிந்து கொள்ளும் பொருட்டு, யார் சபையை ஸ்தாபிப்பார், எங்கே அது முதல் முதலில் ஸ்தாபிக்கப்படும், எப்போது இந்த ஆவிக்குரிய குடும்பத்தின் அங்கமாக மாற ஜனங்கள் தகுதியுடையவராக மாறுவர், எவ்வாறு இதனுடைய அங்கமாக மாறுவது, எவ்வாறு இது தேவனைத் தொழுகொள்ளும் எவ்வாறு இது அமைக்கப்படும், உலகத்தில் அவருடைய பிரதிநிதியாக அதனுடைய கிரியை, மேலும் எல்லா ஜனங்களும் உலகத்தை விட்டு பிரிந்து அற்புதமான, இரட்சிக்கப்பட்ட ஜனங்களின் ஆவிக்குரிய குடும்பத்திற்குள்

பிறப்பது போன்ற சபையைக் குறித்த இந்த அனைத்து முக்கியமான சத்தியங்களைப் போதிக்க வேண்டியவராயிருந்தார். எனவே தான் முதல் நூற்றாண்டில் சபையைக் குறித்து மிக அதிகமாகச் சொல்ல வேண்டியிருந்தது - மிக அதிகமாகக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது!

ஆனால் இன்று ஏன் சபையைப் பற்றி மிக அதிகமாகச் சொல்லவேண்டிய கட்டாயமுள்ளது? சபையைப் பற்றி நாம் அறிந்துள்ள அனைத்தையும் வேதாகமம் நமக்கு சொல்லுகிறதில்லையா? அதுதான் முக்கியமான விஷயம்; சொல்லப்பட்டுள்ள அனைத்தும் நம்முடைய கற்றலுக்கென வேதவாக்கியங்களில் எழுதப்பட்டது, அவருடைய கிருபை, நம்முடைய கீழ்ப்படிதல் மேலும் இவ்வுலகில் நமக்கு ஒவ்வொன்றும் மன்னிக்கப்படுதல், வரப்போகிற உலகில் நித்திய இரட்சிப்பு (2தீமோ.3:16,17;2பேது.1:3; எபி.1:1,2) என சபை சம்பந்தமான தேவனுடைய சித்தத்தை நாம் அறிந்து கொள்ளலாம். எல்லா ஜனங்களும் நேரடியாக வேதவாக்கியங்களுக்குத் திரும்பி, வாசித்து, தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள ஆராய்ந்து பார்த்தால், பின்பு அவர்கள் சபை ஏன் முக்கியமானது என்பதை எளிதாக புரிந்துகொள்வார்கள். திடீரென்று ஒருவன் சபையைக் குறித்த வேதாகம உண்மைகளை அறிந்து கொள்ள வருகிறான், உலகத்தில் இருக்கிற நாமகரணக் குழுக்கள் எதுவும் வேதவாக்கியங்களில் எங்கும் காணப்படாததை அவன் கண்டுகொள்கின்றான். அவன் பிரிவினைகள் கண்டிக்கப்படுவதையும், ஒருவன் தேவனைப் பிரியப்படுத்த விரும்பினால், அவன் இரட்சிக்கப்படும்படிக்கும், ஒரே ஒரு சபையைப் பற்றி மட்டுமே வேதத்தில் வாசிக்கமுடியும் என கண்டுகொள்வான் (மாற்.16:15,16;அப்.2:38,40,47).

மீண்டும் இன்று சபையைப் பற்றி அதிகம் பேசப்படுவதற்கு காரணம், ஏனென்றால் சராசரி மனிதன் கர்த்தர் சபையைப் பற்றிய விஷயத்தைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்க்க வேதவாக்கியங்களுக்கு ஒருபோதும் திரும்பமாட்டான். மாறாக, அவன், சபை முக்கியமல்ல என்றும் ஒருவன் எந்த சபையின் அங்கத்தினனாக இல்லாமலே பரலோகம் செல்லலாம் என்றும், சபை சம்பந்தமான நூற்றுக்கணக்கான தவறான போதனைகளை

இடைவிடாமல் சொல்லும் மனிதனுக்கு அவன் செவிசாய்க்கிறான். ஜனங்கள் இந்தவிதமான எல்லா தவறுகளினால் நிறைந்திருக்கிறபடியினால் வேதாகமம் உண்மையாகவே என்ன சொல்லுகிறது என்பதை இவர்களுக்குக் காண்பிக்க முயற்சிசெய்வது யாரோ ஒருவருக்கு அவசியமாயிருக்கிறது. ஏற்கனவே சொல்லப்பட்ட தவறான தகவலோடும், சபையை தடைசெய்யும்படிக்கு இடைவிடாமல் செய்யப்பட்ட பிரசங்கத்தோடும், போதகத்தோடும், சபை சம்பந்தமான சத்தியத்தைக் காணும்படி ஜனங்களைத் திருப்புவது கடினமானதாயிருக்கிறது. சிலர் இதைச் செய்து, கடைசியாக சமய பிழையின் கட்டுகளை மெய்சிலிர்க்கத்தக்க விதத்தில் தூக்கியெறியப் பலன்கொண்டு, கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தினராகின்றனர். இருந்தபோதிலும் உண்மையான சபை எதுவென்பதையும், இவ்வுலகிலும் வரப்போகிற உலகிலும் இரட்சிக்கப்படும் படிக்கு அதன் அங்கத்தினராக மாறுவதற்கான அவர்களின் அவசியத்தையும் ஜனங்களுக்குத் தொடர்ந்து சொல்ல வேண்டும்.


பிறகு, இதனுடைய அர்த்தம், சபையே இரட்சகர் என்பதா? இல்லை, அதுவல்ல இதன் அர்த்தம். சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களின் அமைப்பு, மனிதர்களாகிய நாம் எந்த ஒருவனையும் இரட்சிக்கும் வல்லமையைப் பெற்றிருக்க வில்லை. அதே சமயம், கிறிஸ்துவே சபையின் இரட்சகராயிருக்கிறார் என எபேசியர்5:23-ல் நாம் வாசிக்கிறோம். மேலும் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் தம் சபையில் சேர்க்கிறார் என அப்போஸ்தலர்2:47-ல் வாசிக்கின்றோம். இதன் அர்த்தம் கர்த்தர் சபையின் இரட்சகரானால்...... அது அவருடைய சபை, வேதாகமத்தின் ஒரே சபை...... பிறகு நாம் இரட்சிக்கப்படும்படிக்கு அதனுடைய அங்கத்தினராயிருக்க வேண்டும். நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் போது, கர்த்தர் நம்மை இரட்சிக்கிறார். மேலும் தம்முடைய சபையில் நம்மை சேர்க்கிறார். ஆகையால் அவருடைய சபை இரட்சிக்கப் பட்டவர்களின் அமைப்பாயிருக்கிறது, இது தெளிவான உண்மை! வேதாகமத்தில் சொல்லப்பட்ட வண்ணம் ஜீவிக்காமல் சபையில் இருக்கிறவர்கள் பற்றிய காரியம் என்ன? முடிவிலே, அவர்கள் மனந்திரும்பி கர்த்தரிடம் திரும்பாதபட்சத்தில் சபையிலிருந்து வெளிக்கொணரப்பட்டு, அவர்கள் இழந்து

போனவர்களாயிருப்பார்கள். ஒருவன் இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்க்கப்பட்ட போது, அவன் நித்திய ஜீவ கிரீடத்தைப் பெறவேண்டுமானால், அவன் மரணபரியந்தம் உண்மையுள்ளவனாயிருக்க வேண்டுமென வேதவாக்கியம் கூறுகிறது (வெளி.2:10).

முதல் நூற்றாண்டில் சபையைக் குறித்து ஏன் மிக அதிகம் பேசப்படுகிறது என்பதற்கும், இன்று சபையைக் குறித்து ஏன் மிக அதிகம் பேசப்படுகிறது என்பதற்கும் இவைகளே காரணங்களாகும். சபை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கின்றபடியினால், கிறிஸ்துவை நாம் பிரசங்கிக்கையில், சபையின் முக்கியத்தையும் கூட பிரசங்கிக்க வேண்டும் என்பதை உணருங்கள் (அப்.8:12). ஆனால் அனைத்து நாமகரண சபைகளைக் குறித்த காரியம் என்ன? கர்த்தர் அவைகளை வாக்குப்பண்ணவில்லை, அவர் அவைகளை ஸ்தாபிக்கவில்லை, அவர் அவைகளுக்காக மரிக்கவில்லை, அவைகள் அவருடைய நாமத்தைத் தரிக்கவில்லை. ஆகையால் அவர் அவைகளை இரட்சிப்பதற்கு வாக்குதத்தம் பண்ணியிருக்கவில்லை. இது தெளிவான உண்மை.

நீங்கள் சபையை தடைசெய்யாதீர்கள். அதை இழக்காதீர்கள், அதில் குற்றம் கண்டுபிடிக்காதீர்கள், அதன் அங்கத்தினனாக மாற மறுக்காதீர்கள். கிறிஸ்து சபையை அதிகமாய் நேசித்து தம்மையே அதற்காகக் கொடுத்தார், அவர் அதற்காக மரித்தர். நீங்கள் சபையை விரோதித்தால், கிறிஸ்துவையே விரோதிக்கிறீர்கள்.

நீங்கள் கர்த்தருடைய சபையின் அங்கத்தினரா? இல்லையென்றால், உங்கள் நேரத்தை வீணாக்காமல் உங்கள் ஆத்துமாவைக் காத்துக்கொள்ளுங்கள். தேவனுடைய வசனத்தை ஆராய்ந்து சபையைப் பற்றிக் கற்றுக்கொண்டு, கர்த்தருக்குக் கீழ்ப்படியுங்கள். அவர் உங்களை இரட்சிப்பார், மேலும் சபையில் உங்களைச் சேர்த்துக் கொள்வார்.



பெண்கள் பகுதி

# தேடுங்கள்– SeeK

*J.Glory Arjunan*



இன்றைய நாட்களில் ஜனங்கள் எதை எதையோ நாடித் தேடுகிறார்கள். சிலர் நல்ல உத்தியோகத்தை தேடுகிறார்கள், சிலர் பட்டங்கள், பதவிகளை நாடுகின்றனர். சிலர் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல வரன்களைத் தேடுகின்றனர். சிலர் ஓயாது காலை முதல் மாலை வரை உணவுக்காகவும், உடைக்காகவும் அலைந்து திரின்றனர். சில்ர் உலக சம்பத்தைத் தேடுகிறார்கள் . சிலர் சமுதாயத்தில் ஒரு பெரிய ஆளாக மாறவேண்டுமென உலக மேன்மையை நாடுகின்றனர். இப்படி அழிந்து போகின்றவைகளையே தேடிக்கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து வேதம் உலகத்தார் என்றும், அஞ்ஞானிகள் என்றும் இழித்துரைக்கிறது.

அன்பு சகோதரிகளே, "......இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" (மத்.6:32). "ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும் அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத்.6:34). அநேகர் இரட்சிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும் இன்னும் உலத்தாரைப் போலவும், அஞ்ஞானிகளைப் போலவும் இப்படிப் பட்டவைகளையே நாடித்தேடுகிறார்கள். தேவன் "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோம.8:32).

**கர்த்தரைத் தேடுங்கள்:**

"உன் தேவனாகிய கர்த்தரைத் தேடு......" (உபா.4:29) என வேதம் கூறுகிறது. உங்களை உண்டாக்கி அனுதினமும் உங்களைக் காத்துவருகிற கர்த்தரைத் தேடுங்கள். முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கர்த்தரைத் தேடுங்கள். அவரே உங்கள் இரட்சகர், அவரே உங்களை சிருஷ்டித்தவர்,

அவரே உங்களைக் காண்கிறவர், அவரே உங்களை சகல தீமையினின்றும் விடுவிக்கிறவர். அவரே உண்மையுள்ளவர், அவரே உயிருள்ளவர், அவரே நித்திய பிதா. ஆகவே அவரையே தேடுங்கள். வீணானவைகளை நாடித்தேடி ஏமாந்து போகாதீர்கள். மேலும் "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்;" (ஏசா.55:6). அதிகாலை என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டைவார்கள்" (நீதி.8:17) என வேதம் கூறுகிறது. ஆம், நம்முடைய அனுதின பாடுகளில் தேவன் நம்மோடிருக்கும்படிக்கும், நம்முடைய காரியங்கள் யாவும் கைகூடி வரும்படிக்கும் நாம் சோதனைக்குட்படாத படிக்கும் அதிகாலையிலே கர்த்தரைத் தேடுவோம். தேவ ஆசீர் பெறுவோம்.

**கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள்:**

கர்த்தர் நமக்கு ஷேமத்தைக் கொடுக்கும்படிக்கு அவருடைய முகத்தைத் தேடுங்கள் என்று 2நாளா.7:14 கூறுகிறது. நாம் ஷேமத்துடனிருப்பது தேவசித்தம். ஆனால் அநேகர் ஷேமம் அடையும்படி அருடைய முகத்தைத் தேட மறந்து விடுகின்றனர். மனுஷருடைய தயவையே நாடி ஓடுகின்றனர். ஜெபிக்க நேரமில்லையென்று கூறி கர்த்தருடைய முகத்தைத் தேடாமல் இரவெல்லாம் தங்களுடைய விருப்பத்தையே நிறைவேற்றும்படி திட்டமிட்டு அதிகாலையில் அதே நினைப்போடு எழுந்து உலகத்தாரைப் போல அழிந்து போகின்றவற்றையே தேடிச் செல்லுகின்றனர். காரியம் வாய்க்காமல் திரும்புகின்றனர். அல்லது காரியம் வாய்த்தாலும் அது அதிசீக்கிரத்தில் அழிந்து போகக் கூடிய அநித்தியமானவை என்பதை மறந்து முடிவிலே ஏமாற்றமடைகின்றனர். தாவீது ராஜா 'அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்பட வில்லை' (சங்.34:5) என்று பாடுகிறான். நாமும் கர்த்தருடைய முகத்தை நோக்கிப்பார்த்து பிரகாசமடை வோமாக!

**தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்:**

"தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (லூக்.12:31) என வேதம் கூறுகிறது. மத்.6:32-ம் கூட "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை...... தேடுங்கள், அப்பொழுது இவைகளைல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்"

என்கிறது. இங்கு தேவனுடைய ராஜ்யத்தை மட்டும் தேடுங்கள், அதையும் முதலாவது தேடுங்கள் என்று அறிவுறுத்திக் கூறப்படுவதை சற்று சிந்திக்கவேண்டும். அஞ்ஞானிகளைப் போல உலகக்காரியங்களையே நாடித்தேடுவதை தேவன் விரும்புகிறதில்லை. தம்முடைய பிள்ளைகள் தம்முடைய வார்த்தைகளை விசுவாசித்து தம்முடைய ராஜ்யத்தையே தேடும்படி விரும்புகிறார். அவருடைய விருப்பத்தின்படி செய்யும் போது நமக்கு வேண்டியவைகள் எல்லாவற்றையும் அவர் அருளிச்செய்வார். அன்பு சகோதரியே, இன்னும் உலகம் உலகம் என்று உலகத்தையே நாடி முடிவிலே கவலைப்பட்டு கலங்குவதை நிறுத்துங்கள். தம்முடைய சொந்தகுமாரனையே ஒப்புக்கொடுத்து உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். அன்று இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் அடிமைப்பட்டு அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக் கொண்டிருந் தார்கள். தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு அவர்களை நினைத்தருளி அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். அவர்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குக் கொண்டுபோவேன் என்று சொல்லி அழைத்தார். அழைத்தவர் அவர்களை நாற்பது வருடங்களாகப் போஷித்து குறைவின்றி வழிநடத்திச் சென்றார். அதன்பின் தாம் வாக்களித்த வண்ணம் தம்மை விசுவாசித்த வர்களை பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குற் கொண்டு போய் சேர்த்தார். ஆம் உங்களை அழைத்தவரும் அவரே! அவர் உங்களைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து பரம கானானாகிய பரலோகத்திற்குக் கொண்டு செல்லும்படி அவருடைய ராஜ்யத்தையே தேடுங்கள் என்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள். சபையாகிய இந்த ராஜ்யத்தைத் தேடும்போது நீங்கள் போஷிக்கப்படுவீர்கள். குறைவின்றி நடத்திச்செல்லப்படுவீர்கள். ஏனெனில் கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார் (எபே.5:29). சபையாகிய ராஜ்யத்தைக் குறித்த வைராக்கியம் உங்களுக்குள் இருக்கட்டும். சபையை அலட்சியம் செய்யாதீர்கள். விசுவாசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் மட்டுமே பரம கானானுக்குள் சேர்க்கப்படுவர்.

**கர்த்தரைத் தேட இதுவே காலம்:**

"......கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை

வருஷிக்கப்பண்ணும்மட்டும், அவரைத் தேடக்கால மாயிருக்கிறது" (ஓசி.10:12) என வேதம் கூறுகிறது. கர்த்தர் உங்கள் பிரயாசங்களுக்கேற்ற, பலனை வருஷிக்கப்பண்ணும் வரைக்கும் அவரைத்தேடக்காலமாயிருக்கிறது. ஆம், காலம் சமீபித்து வருகிறபடியால் இதுவே அவரை தேட வேண்டிய சமயமாயிருக்கிறது. அன்பு சகோதரியே, நீ ஒருவேளை கர்த்தராகிய உன் சிருஷ்டிகரைத் தேடாமலிருக்கலாம். தாமதிக்காதே. "....இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்". எனவே இன்றே அவரைத் தேட வேண்டிய காலமாயிருக்கிறது. இன்று அவரைத் தேட தாமதிப்பாயானால் இம்மையிலும் மறுமையிலும் அநேக ஆசீர்வாதங்களை இழந்து போவாய். கர்த்தர் வந்து உங்கள் மீது நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும் அவரைத் தேட காலமாயிருக்கிறது.

அன்பு சகோதரிகளே, தேடுங்கள் அப்பொழுது உங்களுக்குத் தேவையானவைகள் எல்லாம் கூடக் கொடுக்கப்படும். உலகத்தாரைப்போல அல்ல. ராஜ்யத்தின் பிள்ளைகளாய் விசுவாசத்துடன் ".....தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்........" (மத்.7:7). "என்னைத் (கர்த்தரைத்) தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்" (ஆமோ.5:4) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே கர்த்தருடைய ஆசீர்வாதங்களைக் கண்டடையும்படிக்கும், நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும் கர்த்தரைத் தேடுங்கள், கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள், தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், கர்த்தரைத் தேடக் காலமாயிருக்கிறபடியால் இன்றே தேடுங்கள்.

## வேத அறிவுப்போட்டி எண் 57 -ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| P. அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு | A.கந்த சாமி | -தெக்கலூர் |
| S.தண்டபாணி | -சிலுவத்தூர் | K.சதீஸ்குமார் | -தெக்கலூர் |
| S.சாம் பிச்சை | -மதுரை | G.P.ஏசையன்ராஜ் | -கோபி |
| R.கலாவதிராஜா | -சத்திரப்பட்டி | J.S.நிர்மலாஜான் | -மதுரை |
| S.சாமுவேல் | -ஊதியூர் | S.பேபிபுனிதாராணி | -பொ.மங்களம் |
| E.டென்சிங்மனோகர் | -மதுரை | D.ஏசுதாஸ் | -சித்தூர் |
| A.சேவியர் மேரி | -மதுரை | M.சுதாகர் | -கொடுமுடி |
| VS.ஆனந்தராஜ் | -ஈரோடு | V.அனிதா | -சொக்கலிங்கபுரம் |
| Mrs.ஜாஸ்மின் வின்சென்ட் ராஜ் | -மதுரை | G.கிரேஸ்ஜெயா | -வெள்ளக்குளம் |
| A.ஆனந்த் | -மதுரை | N.கமலவேணி | -சென்னை |
| R.ராமதாஸ் | -சென்னை | S.சாரதா பேலிக்ஸ் | -சென்னை |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை | P.டேனியேல் கந்தசாமி | -ஒட்டன்சத்திரம் |
| S.மரியம்மாள் | -ஆதிரெட்டி | P.குணசேகரன் | -விராலிமலை |

## சபையை வளர்ப்பது எப்படி?

## How to grow a Church?

*-David Tarbet*



அநேக பிராந்திய சபைகள் தாங்கள் வளர்ச்சியடைய விரும்புகிறதாகக் கூறுகிறது. சபையை வழிநடத்திச் செல்பவர்கள் இலக்குகளுடன் சவால் விடுகின்றனர்- இலக்குகள் நிறைவேற்றப்படக்கூடியவையாகவும் நிதானமானவை யாவுகமிருக்கின்றன. பின்வரும் இரண்டு பிரதான கூட்டுப்பொருள்களும் சபை வளர்ச்சியடைவதற்கு தேவையானவை: வெற்றியடைய, வளர்ச்சியைக் குறித்து சம்பாஷித்தல் மற்றும் இலக்குகளை நிர்ணயித்தல். ஆனால் அதிக முயற்சி வேண்டும்.

வளர்ச்சியைக் கொடுக்கும்படி தேவனிடத்தில் நாம் அதிகம் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பொது ஜெபத்தை வழி நடத்திச் செல்பவர்கள் சபை 'வளர்ச்சிக்குக்' கர்த்தரை நோக்கிக் கெஞ்சுவதை நாம் செவிகொடுத்துக் கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசுவையன்றி நாம் 'ஒன்றும் செய்யமுடியாது' என இயேசு நமக்கு அறிவுறுத்தினார் (யோவா.15:5). ஒவ்வொரு நாளும் நம்முடைய தனிப்பட்ட தியானங்களில் சபை வளர்ச்சிக்கான விண்ணப்பத்தினை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

பிராந்திய சபையின் தனிப்பட்ட அங்கத்தினர்கள் மற்றவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுவதற்கு தனிப்பட்ட முறையில் உண்மையான கடமை உணர்வினை கண்டிப்பாகப் பெற்றிருக்க வேண்டும். வெறுமனே ஆராதனையில் கலந்து கொள்ளுவது மட்டும் போதாது (இது மிகவும் முக்கியமானது என்றாலும்). சபைகள் எண்ணிலடங்காமல் பெருகிக் கொண்டிருக்கின்றன. ஏனென்றால் சபைகளின் தனிப்பட்ட அங்கத்தினர்கள் வெளியிலிருப்பவர்களை ஆராதனையில் கலந்து கொள்ளச் செய்யயும்படிக்கு பிரசங்கிக்கப்படுகிற பிரசங்கத்தைக் கேட்வும் அல்லது ஒரு வீட்டில் நடைபெறும் வேதாகம வகுப்பில்

இணைந்து கொள்ளவும் அழைப்பதற்கு ஒரு ஒப்புக்கொடுத்தலை உருவாக்குகின்றனர். பிலிப்பு தன்னுடைய நண்பனை "வந்து பார்" என்ற இவ்விதமான அழைப்பினை: (யோவா.1:46). விடுத்தலின் மூலம் இழுத்துக்கொண்டான்.

நாமனைவரும் சபையைக் குறித்த எழுப்புதலை ஏற்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். கிறிஸ்தவர்களாக இருக்கின்ற சிலாக்கியம் அருளப்படுவதற்கு இதைச் செய்வது எவ்வளவு சுலபம்! ஆனால் ஆவிக்குரிய உணர்வின்மை சபையை ஒருபோதும் வளர்ச்சியடையச் செய்யாது. துன்புறுத்தப் பட்டவர்கள் தேவனுடைய 'குடும்ப அந்தஸ்தைப் பெறுவதில் துன்பங்களைப் பொருட்டாக எண்ணாமல் தங்களுடைய ஆசீர்வாதங்களை மீண்டும் எண்ணிப்பார்க்கவும், கிருபையினால் தாங்கள் பெற்றிருக்கிறவைகளுக்காகத் தாழ்மையுடன் தேவனை ஸ்தோத்தரிக்கவும் செய்கின்றனர். அந்திரேயா தன்னுடைய நம்பிக்கையின் நிச்சயத்தினாலும் உற்சாகத்தி னாலும் தன்னுடைய சகோதரனை சீஷனாக மாற்றும்படிக்கு "மேசியாவைக் கண்டோம்" (யோவா.1:41) என்று சொல்லத் தூண்டினான்.

அங்கத்தினர்கள் மேற்கூறிய இவைகளையெல்லாம் நடைபெறச் செய்யும்போது சபைகள் வளர்ச்சியடைகின்றன. சபையின் பின்பகுதியில் வெறுமனே உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் நேரம் இதுவல்ல. எழுந்து கிரியை நடப்பிக்கக் கூடிய நேரம் இது. போதிக்கப்பட வேண்டிய ஜனங்களை நாம் கண்டுபிடிக்க தேவன் வாசல்களை திறக்கும்படிக்கு ஜெபிக்க வேண்டிய நேரம் இது - விழிப்பாயிருக்க வேண்டிய நேரம் இது - அழைப்பினை அதிகரிக்க வேண்டிய நேரம் இது.

**"நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்" (நீதிமொழிகள்11:30)**

*-The Voice of Truth International*

**வேத அறிவுப்போட்டி எண் 57 -ன் விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. பிரகாசிக்கப்பண்ணும் | -பிர.8:1 | 6.கூடாதே | -ரோம.6:15 |
| 2.தாவீது | -சங்.69:4 | 7.அன்னாள் | -1சாமு.1:13 |
| 3.பெரியவர் | -1யோவா.4:4 | 8.நகோமி | -ரூத்4:17 |
| 4.பரிதபிக்கப்படத்தக்கவர் களாயிருப்போம் | -1கொரி.15:19 | 9.லாசரு | -லூக்.16:21 |
| 5.சாலொமோன் | -1இராஜா.10:3 | 10.தண்ணீர் மிகுதியாய் இருந்தபடியினால் | -யோவா.3:23 |

# வேதாகம ஆலோசனை

**"இவைகள் பேதைகளுக்கு வினாவையும்,**
**வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும்.**
**புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்;**
**விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும்,**
**அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும்,**
**அவர்கள் உரைத்த புதை பொருள்களையும்**
**அறிந்துகொள்வான்" (நீதி.1:4-6)**

**வேதாகம ஆராய்ச்சி பாடம்-1**

**3. வேதாகமத்தை ஆராய்ந்து படிப்பதால் நமக்கு நித்திய ஜீவன் உண்டா?**

ஆம், ஆண்டவர் இயேசுவும் "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (யோவா.5:39) என்று கூறியுள்ளார். வேதாகமத்தை ஆராய்ந்து படிக்கும்படியாக சபைகளில் வேதபாட வகுப்புகள் நடத்தப்படுகின்றன மற்றும் வீடுகளில் வேதபாட வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அதை பயன்படுத்திக்கொண்டு வேத அறிவைப்பெருக்கிக் கொள்ளுங்கள். "சத்தியத்தையும் அறிவீர்கள் , சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:32). வேதாகமத்தை ஆராய்ந்து படித்தால் தான் சத்தியத்தை அறிந்து கொள்ளமுடியும். எது சத்தியம்? வேதமே சத்தியம், ஆண்டவர் இயேசுவே சத்தியம், அவரையும் அவருடைய வசனத்தையும் அறிந்து கொள்ள வேதாகம ஆய்வு மிகவும் அவசியம். சத்தியத்தை நாம் அறியும்போது சத்தியத்திற்குக் கீழ்ப்படிவோம் சத்தியம் நம்மை விடுதலையாக்கும். நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்வோம்.

**4. வேதாகமத்தை நாள் முழுதும் தியானிக்க வேண்டுமா?**

வேதாகமத்தை உங்களுடைய இருதயத்தில் எழுதிவைத்துக்கொள்வது நல்லது. அவ்வப்போது உங்களை நல் வழி நடத்தும். நாள் முழுவதும் தியானிப்பது என்பது எப்படி முடியும் என்பது அநேகருடைய கேள்வி! நீங்கள் ஒருவரை அதிகமாக நேசிப்பீர்கள் என்றால் அவரை ஒருநாளைக்கு எத்தனை முறை நினைப்பீர்கள் என்று யோசித்துப்பாருங்கள். நீங்கள் வேதாகமத்தை நேசிப்பீர்கள் என்றால் நாள் முழுவதும் என்ன, ஆயுள் முழுவதும் கூட தியானிப்பீர்கள்! தாவீது "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள்முழுதும் அது என் தியானம்" (சங்.119:97) என்கிறான்.

## பேசும் வேதாகமம் : 7

1. அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று எது பரிசோதிக்கும்? - அக்கினியானது - 1கொரி.3:13
2. பாவஞ்செய்கிறவன் யாரால் உண்டாயிருக்கிறான்? - பிசாசினால் - 1யோவா.3:8
3. ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் எப்படிப்பட்டது? - செத்தது - யாக்.2:26
4. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது எப்படிப்பட்ட காரியம்? - கூடாதகாரியம் - எபி.11:6
5. அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட என்ன செய்வோம்? - ஆளுகையும் - 2தீமோ.2:12
6. தேவன் படைத்ததெல்லாம் எப்படியிருக்கிறது? - நல்லதாயிருக்கிறது - 1தீமோ.4:4
7. சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக எப்படிப்பட்ட வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்? - கொடிய - 2தெச2:11,12
8. கெட்ட வார்த்தை ஒன்றும் யார் வாயிலிருந்து புறப்படவேண்டாம்? - உங்கள் - எபே.4:29
9. நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் என்ன செய்வோம்? - அறுப்போம் - கலா.6:9
10. நாம் தரிசித்து நடவாமல், எப்படி நடக்கிறோம்? - விசுவாசித்து - 2கொரி.5:6

### எதை நீங்கள் கட்டுப்படுத்த முடியும்?

### What Can you Control?

- **நீங்கள் கட்டுப்படுத்த முடியாது உங்கள் ஜீவியத்தின் முடிவை** ஆனால் நீங்கள் கட்டுப்படுத்த முடியும் அதனுடைய அகலத்தையும் ஆழத்தையும்.
- **நீங்கள் கட்டுப்படுத்த முடியாது உங்களுடைய முகத்தின் உருவத்தினை-** ஆனால் நீங்கள் கட்டுப்படுத்த முடியும் உங்களுடைய முகக்குறியினை.
- **நீங்கள் கட்டுப்படுத்த முடியாது சீதோஷ்ணநிலையை-**
  ஆனால் நீங்கள் கட்டுப்படுத்த முடியும் உங்களுடைய மனதின் சூழ்நிலையை
  ஏன் நீங்கள் கவலைப்படுகிறீர்கள் நீங்கள் கட்டுப்படுத்த முடியாத காரியங்களைக் குறித்து,
  உங்களை சார்ந்திருக்கிறவற்றினை நீங்கள் கட்டுப்படுத்துவதில் உற்சாகமாய் உங்களை எப்போது ஈடுபடுத்துவீர்கள்?

# ஜீவ வழி—The Way of Life

*P. Balakrishnan*



கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகள் யாவருக்கும் இறை மகன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதிலே மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

அன்றாட வாழ்க்கையிலே எத்தனையோ வழிகளை கடந்து சென்று கொண்டிருக்கும் நாம் சரியான வழியிலே செல்கிறோமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும் (ஆகாய்2:5).

எடுத்துக்காட்டாக ஒரு கடிதத்தை சரியான இடத்திற்கு அனுப்ப வேண்டுமென்றால் சரியான விலாசத்தோடே எழுதி அஞ்சல் பெட்டியிலே போடவேண்டும். அதற்கு பதிலாக புகார் பெட்டியிலே போட்டுவிட்டுச் சென்றால் அந்த கடிதம் அந்த இடத்திற்குச் சென்று விடுமா? செல்லாது. இதே போல் தான் இன்றைய வாலிப சகோதர சகோதரிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாயையை பின்பற்றி மரணத்தை நோக்கி வெற்றிப்பயணம் மேற்கொள்கின்றனர். தேவனுடைய வழியை தேடாமல் தேவையில்லாத வழிகளைப் பின்பற்றுகிறார்கள். ஆகையால் மனுஷனுடைய வழி எப்படிப்பட்டது? தேவனுடைய வழி எப்படிப்பட்டது. மனுஷனுடைய வழியில் சென்றால் அதன் முடிவு என்ன, தேவனுடைய வழியைப் பின்பற்றினால் அதன் முடிவு என்ன என்று வேதாகமம் நமக்கு என்ன போதிக்கிறது எனபார்ப்போம்.

**மனுஷனுடைய வழிகள்:**

மனுஷனுடைய போதனைகளைப் பின்பற்றுபவர்கள் இன்று பெருகிக் கொண்டே வருகிறார்கள். மனுஷனுடைய பாரம்பரியத்தையும், மனுஷனுடைய வழிமுறைகளையும் பின்பற்றி நடைபிணமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வழிகளின் முடிவு 'மரணம்'. (நீதி.14:12). மனுஷனுக்குச் செம்மையாய் தோன்றுகிற வழி உண்டு

அதன் முடிவோ மரணவழிகள் என வாசிக்கிறோம் (நீதி.16:12). ஆகையால் எனக்கு அன்பான வாலிப சகோதர சகோதரிகளே, நாம் சரீரபிரகாரமாக பார்க்கும் கூட்டத்தைப் பின்பற்றி அவர்களுடைய வழியில் செல்வோமானால் தேவனுடைய ராஜ்யத்திலே பிரவேசிக்க முடியாது. ஏனென்றால் மரணத்திற்குப் போகிற வாசல் விசாலமாயிருக்கிறது என்று கிறிஸ்து மத்.7:13 கூறுகிறார். ஆகையால் இடுக்கமான வாசல் வழியாய் பிரவேசிக்க வேண்டும் என்று ஆண்டவராகிய கிறிஸ்து நமக்கு போதிக்கிறார். நம்முடைய ஜீவியத்தில் அநேக வழிகளை கண்கூடாக பார்க்கிறோம். அந்த வழிகளைக் குறித்து ஆயிரமாயிரமான வாலிப பிள்ளைகள் நமக்குப் போதிக்கிறார்கள். மனுஷனுடைய வழிகளைப் பின்பற்றுவோமானால் நிச்சயம் மரணம் என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. ஆனபடியால் சிந்தித்து நல்ல வழி எது என்று கேட்டு விசாரித்து நடவுங்கள்.

**நல்ல வழி:**

வழிகளிலே நின்று, பூர்வ (நிலையான) பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (எரே.6:16).

**தேவனுடைய வழி எப்படிப்பட்டது?**

சங்கீதக்காரனாகிய தாவீது கூறும்போது; தேவனுடைய வழி உத்தமமானது என்று கூறுகிறான் (சங்.18:30). ஓசியா தீர்க்கன் "கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள்" (ஓசி.14:9) என்கிறான். மேலும் தேவன் தமது தீர்க்கதரிசிகள் மூலம் மனிதனுடைய வழிக்கும் தேவனுடைய வழிக்கும் சம்பந்தமேது என்று கூறுகிறார். "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசா.55:8). ஆக, தேவனுடைய வழிகள் நம்முடைய வழியிலிருந்து வேறுபட்டவைகள்.

**ஜீவ வழி:**

"இதோ நான் உங்கள் முன்னே ஜீவ வழியையும், மரண வழியையும் வைக்கிறேன் என்று சொல்லுகிறார் (எரே.21:8). எனக்கு அன்பானவர்களே நமக்கு முன்பாக இரண்டு வழிகள் வைக்கப்பட்டுள்ளது. எதைத் தெரிந்து கொள்ளப்போகிறீர்கள்? எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களை ஜீவ வழியிலே நடத்திச்செல்ல மோசே நியமிக்கப்பட்டார். அவர்களோ, மோசேக்கும் தேவனுக்கும்

செவிகொடாமல் மரணவழிகளைப் பின்பற்றி மாண்டுபோனதை நாம் வேதத்தில் வாசிக்கின்றோம். ஆகையால் வாலிப சகோதரனே சகோதரியே பாதளத்திற்குப் போகும் மரண வழியை பின்பற்றாமல் ஜீவ வழியில் நடக்க பிரயாசப்படுங்கள்.

**பரிசுத்தமான வழி:**

அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும். அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை: அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப்போவதில்லை (ஏசா.35:8). தேவனுடைய வழி 'பரிசுத்தமான வழி' என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. தாவீது கூறும்போது "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான், உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் தானே" (சங்.119:9). கர்த்தருடைய வசனத்தின் படி வாலிப பருவத்தில் நம்மை காத்து, பரிசுத்த வழியை பற்றிக்கொண்டு, நாள்தோறும் அவ்வழியே ஓடி, அவரைத் துதித்துப் பாடி, அவருடைய அழியாத நித்திய ராஜ்யமாகிய பரலோகத்தை நோக்கி வெற்றிநடை போடுவோம். தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!..... ஆமென்.

## பொது அறிவுச் சோதனை

1. குளிர் பிரதேசங்களில் தோன்றும் மாயத் தோற்றம் எது?
   அ) லூமிங் ஆ) கானல் நீர் 24 இ) கணுக்கள்
2. ஆயிரம் ஏரிகளை கொண்ட நாடு எது?
   அ) ஸ்காட்லாந்து ஆ) பின்லாந்து 24 இ) தாய்லாந்து
3. வட அமெரிக்க கண்டத்தையும் ஆசியா கண்டத்தையும் பிரிக்கும் நீரிணைப்பு எது?
   அ) பாக் நீரிணைப்பு ஆ) பனாமா கால்வாய் இ) பேரிங் நிரிணைப்பு
4. ஆன்டெனா என்பது எந்த மாதிரியான வேலையை செய்கிறது?
   அ) குட்டை அலைகளை நீள அலைகளாக மாற்றுகிறது ஆ) வெப்பத்தை உறிஞ்சுகிறது இ) ரேடியோ அலைகளை மின் அலைகளாக மாற்றுகிறது
5. இந்திய அரசியலமைப்பு இந்தியாவை.....?
   அ) மாநிலங்களின் கூட்டமைப்பு என்று விளக்குகிறது ஆ) ஒற்றையாட்சி அரசு என்று விளக்குகிறது இ) அரைகுறை கூட்டாச்சி என்று விளக்குகிறது

விடைகள்: 1.லூமிங் 2.பின்லாந்து 3.பேரிங்நீரிணைப்பு 4.ரேடியோ அலைகளை மின் அலைகளாக மாற்றுகிறது 5.மாநிலங்களின் கூட்டமைப்பு என்று விளக்குகிறது.

# சந்திப்போம்! சிந்திப்போம்!

உரையாடல் - 33

D.எபிநேசர்

**யோனத்தான்:** கிறிஸ்துவின் சபையிலே ஒருத்தர் ஜெபிக்கிறாரு, கடைசியில் எல்லாரும் 'ஆமென்' சொல்றாங்க. ஆனா சில சபைகளிலே எல்லோருமே ஒரே சமயத்திலே ஜெபிக்கிறாங்களே! அது சரியா?

தாவீது: 'சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது' என்று பரிசுத்த ஆவியானவர் 1கொரி.14:40-ல் பவுல் மூலமாக எழுதுகிறார். ஒரு மீட்டிங் நடக்கும்போது எல்லோருமே எந்திரிச்சுப் பேசினா எப்படி இருக்கும்! யாரும் எதுவும் கேட்க முடியாது இல்லையா? ஜெபத்தின் முடிவில் நாம் ஆமென் என்று சொல்ல வேண்டும் மத்6:13. ஆமென் என்றால் 'அப்படியே ஆகக்கடவது' என்று அர்த்தம். மற்றவர்கள் என்ன சொன்னார்கள் என்று தெரியாமலே ஆமென் என்று சொல்ல முடியுமா? எனவே அதுமாதிரியான ஜெபங்கள் ஒரு ஒழுங்கிற்குள் வராது யோனத்தான்.

யோனத்தான்: சரி வேதாகமம் இதைப் பற்றி என்ன சொல்கிறது தாவீது?

தாவீது: அப்போஸ்தலனாகிய பவுல் இந்த மாதிரி ஜெபத்தைக் கண்டிக்கிறார் 1கொரி.14:16-ஐ படி.

யோனத்தான்: "நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும் போது கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அறியானே"

தாவீது: தொடர்ந்து 23-ம் வசனத்தையும் படி.

யோனத்தான்: ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது, கல்லாதவனாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா?

தாவீது: ஆகவேதான் 1கொரி.14:40-ல் பரிசுத்த ஆவியானவர் சகலமும் ஒழுங்கோடு செய்யப்பட வேண்டும் என்று சொல்கிறார்.


யோனத்தான்: சரி தாவீது. ஜெபம் எப்படி ஒழுங்கோடு செய்யப்பட வேண்டும் என்பதை தெரிஞ்சுக்கிட்டேன். அடுத்த முறை வேறு ஒரு கேள்வியோடு சந்திக்கிறேன். குட் பாய்.....

தாவீது: குட் பாய்..... யோனத்தான்.

**(மீண்டும் சந்திப்போம்)**

# ஆண்டவருக்கு வேண்டும்

வேதவாசிப்பு: மாற்கு11:1-10



ஆண்டவர் மனிதனிடத்தில் கேட்ட ஒரு சிலவற்றில் இந்த கழுதைக் குட்டியும் ஒன்று. ஆண்டவர் கேட்டா இல்லை என்று சொல்வார்களா என்ன?

ஒரு முறை இயேசு ஒலிவமலைக்கு அருகான பெத்பகே பெத்தானியா என்ற ஊருக்கு வந்து தம்முடைய சீஷர்களில் இரண்டுபேரை அழைத்து: உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள் அங்கே ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்க காண்பீர்கள் அதை அவிழ்த்துக் கொண்டுவாருங்கள். ஏன் அதை அவிழ்க்கிறீர்கள் என்று கேட்டால் அது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள் உடனே அதை இங்கு அனுப்பி விடுவான் என்று சொல்லி அவர்கள்ள அனுப்பினார்.

அவர்கள் புறப்பட்டு போய் அந்தப்படியே சென்று அந்த கழுதைக் குட்டியை அவிழ்த்தார்கள். இயேசு தங்களிடத்தில் சொன்னபடியே அந்த உரிமையாளனிடம் சொன்னார்கள் அப்பொழுது அவன் அதை அனுப்பிவிட்டான். நீங்களா இருந்தா கொடுப்பீங்களா? ஓ கொடுப்போமே என்கிறீர்களா?. மிக நல்ல பிள்ளைகள். நாம் ஆண்டவருக்குக் கொடுக்கும்போது கர்த்தர் நம்மை நிச்சயம் ஆசீர்வதிப்பார். அந்த கழுதைக் குட்டியின் மீது தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள் இயேசு அதன்மீது ஏறினார். பின்பு அவர்கள் கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப் பட்டவர். நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப் படுவதாக உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். நம்மெல்லோருக்கும் இயேசு ராஜாவாக இருப்பதினாலே இவ்விதமாகச் சொன்னார்கள். அவர் ராஜாவானால் அவருடைய ராஜ்யம் நமக்குள்ளே இருக்கிறதல்லவா! ஆம் அந்த ராஜ்யம் அவருடைய சபையே.

**மனப்பாட வசனம்**

"அதற்கு இயேசு: இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். அவர்கள் அவரைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" (மாற்கு12:17).

## வேத அறிவுப் போட்டி எண்.58

*போட்டியாளர்கள் கவனத்திற்கு,*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.*

1. இந்தக் கல் நமக்குள்ளே சாட்சியாயிருக்கக்கடவது என்று சொன்னவன் யார்?
2. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு எது?
3. தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்து வரும் கிரியையை மனுஷன் என்ன செய்யான்?
4. நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான் என்று யார் யாரைப் (பற்றி) குறிப்பிடுகிறான்?
5. மனரம்மியமோ எப்படிப்பட்ட விருந்து?
6. துர்க்குணராகிய பொல்லாத மனுஷர்கையின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் என்று எழுதுவது யார்?
7. நீ கழுகைப்போல் உயரத்தில் உன் கூட்டைக் கட்டினாலும் அங்கேயிருந்து உன்னை என்ன செய்யப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
8. சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனா?
9. உன்னை வெறும் பாறையாக்கிவிடுவேன் என்று எந்த தீவைப்பார்த்து கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்?
10. நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டவன் யார்?

## நடப்புச் செய்திகள்

- வானிலை மாற்றத்தால் இயற்கை பேரழிவு ஏற்படலாம். வெள்ளம், வறட்சி எதுவானாலும் சந்திக்க தயாராக இருக்கவேண்டும் என்று மாநில முதல்-மந்திரிகளுக்கு பிரதமர் மன்மோகன்சிங் கடிதம் எழுதியிருக்கிறார்.
- இந்திய விமானப் போக்குவரத்து துறை அண்மைக்காலமாக சிறப்பான வளர்ச்சியை பெற்றுவருகிறது. விமானத்தில் பயணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது
- பெல் நிறுவனத்தின்ரூ.2100கோடி அரசு பங்குகளை விற்பனை செய்ய அதிரடி முடிவு
- சுவிட்சர்லாந்து -இந்தியா இடையே அணுசக்தி வளர்ச்சி ஒப்பந்தம், ஜனாதிபதி அப்துல்கலாம் முன்னிலையில் கையெழுத்தானது.
- ஜெர்மனியில் 2006-ம் ஆண்டு நடைபெறும் உலகக்கோப்பை கால்பந்து போட்டியின்போது ரகசிய கேமராக்கள் மைதானத்தில் பொருத்தப்பட உள்ளது என்று உள்நாட்டு அமைச்சர் ஓட்டோ கூறியுள்ளார்.

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: **B.Arjunan.**


Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629
Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment
License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th June 2005.



**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க**
**அன்புடன் அழைக்கிறோம்**

## கிறிஸ்துவின் சபை

**17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202**
**திண்டுக்கல் மாவட்டம்.**
**போன்: 04543-263278 செல்: 9443558041**
E-mail:thewordofchrist@sancharnet.in
arjunglory@yahoo.co.in



"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்
**The Master Course**
தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.15/- செலுத்தி
இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்




**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box 5. BATLAGUNDU - 624 202
S.INDIA

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா - ரூ.50/-
வெளிநாடு - ரூ.500/-
தனிப் பிரதி - ரூ.5/-

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box 5
Batlagundu - 624 202
S. India